**<u>இராணிப்பேட்டை நகராட்சி</u>**

**<u>2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்</u>**

**<u>தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்</u>**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 18.12.2018 | **<u>பொருள் எண். 3039</u>**<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 13277/2018/WS1 நாள் 03.07.2018 கடிதத்தின்படி இராணிப்பேட்டை நகராட்சியில் 2100 எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகளை (Internal Plumbing of Water Supply House Service Connection) தெருவிலுள்ள பகிர்மான குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதித்திட TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக ரூ. 70.59 இலட்சம் ஒதுக்கீடு செய்து கடிதம் எண். TUFIDCO / URF1819–40 ULBs / AM(M) / 2018 நாள் 07.12.2018–ல் அனுமதிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள கடிதத்தின் அடிப்படையில் மேற்படி பணிக்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 74.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கென TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக அனுமதித்த தொகை ரூ.70.59 இலட்சத்திற்கும் கூடுதலாகும் ரூ. 3.41 இலட்சம் நிதியினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1254/2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3039 அனுமதிக்கப்படுகிறது |

| 18.12.2018 | <u>பொருள் எண். 3040</u><br><br>**<u>RANIPET MUNICIPALITY</u>**<br>**<u>COUNCIL RESOLUTION</u>**<br><br>1. Resolved that Ranipet Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs. 70.59 Lakh ( Rupees Seventy Lakhs and Fifty Nine Thousand Only) from TUFIDCO for 'Provision of Internal Plumbing for HSC ( Minimum 2100 Nos) for making optimum utilization of Water supply at Ranipet Municipality ' under Revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.<br><br>2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and Complete all the other formalities including affixing of the common seal of Ranipet Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Ranipet Municipality.<br><br>3. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement .<br><br>4. Resolved to adhere to time line as envisaged DPR.<br><br>5. Resolved that Ranipet Muncipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Ranipet Municipality's annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without defalut for creating sustainable revolving fund. | நகரமன்றத் தீர்மானம் எண். 3040 அனுமதிக்கப்படுகிறது |
|---|---|---|

| | | |
|---|---|---|
| | 6. Resolved that Ranipet Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for Water supply in favour of TUFIDCO till the repayment of Loan.<br>**Roc. No. 1254/2018/E1** | |
| | **2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள** | |
| 31.12.2018 | **பொருள் எண். 3041**<br><br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 1308/2015/சி1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3041 அனுமதிக்கப்படுகிறது |
| 31.12.2018 | **பொருள் எண்.3042**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 675/2015/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3042 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 31.12.2018 | **<u>பொருள் எண்.3043</u>**<br>வேலூர், மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.அ4/20196/2017 நாள் 29.09.2018–ல் வேலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்துத்துறை அரசு அலுவலகங்களிலும் பொதுமக்கள் அறியும் வண்ணம் பொதுமக்களின் பார்வைக்கு எளிதாக தெரியும் வகையில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி புதிய அலுவலக முகவரியிட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குறித்த விளம்பர பலகையினை வைக்குமாறு தெரிவித்துள்ளதற்கிணங்க இந்நகராட்சி அலுவலகத்தில் பிரதான நுழைவு வாயிலில் பொதுமக்கள் அறியும் வண்ணம் மேற்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குறித்த புதிய அலுவலக முகவரியிட்ட விளம்பர பலகை வைக்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.3000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.3000/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண். 2500/2018/சி1)** | நகரமன்றத் தீர்மானம்<br>எண். 3043<br>அனுமதிக்கப்படுகிறது |
| 31.12.2018 | **<u>பொருள் எண்.3044</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து வீடுகளிலும் மகளிர் சுய உதவிக்குழுக்களை கொண்டு அபேட் மருந்து தெளித்தல் மற்றும் வீடுகளை சுற்றியுள்ள தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தும் பணிக்கு 30 நபர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய அடிப்படையில் பணி மேற்கொள்ளவும் பொதுமக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்குதல், பள்ளி மாணவ மாணவிகளை கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், டெஙகு காய்யச்சல் முன் தடுப்பு பணிகள் நடைபெறுவதை புகைப்படம் எடுக்கும் பணிகளை மேற்கொள்ள பொது சுகாதாரம் சட்டம் 53 (i) –ன் கீழ் செலவினம் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/–த்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் (பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் | நகரமன்றத் தீர்மானம்<br>எண். 3044<br>அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.2265/2016/எச்1)** | |
| 31.12.2018 | **<u>பொருள் எண்.3045</u>**<br>இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் டம்பர்பிளேசர் வாகன எண். TN73D8588 வண்டிக்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு<br>1) தகுதிச்சான்று கட்டணம் – 850/–<br>2) வேககட்டுப்பாட்டு கருவி புதுப்பித்தல் கட்டணம் – 1500/–<br>3) புகை சான்று கட்டணம் – 100/–<br>--------<br>ரூ.2450/–<br>--------<br>ரொக்கமாக வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தொகையை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | நகரமன்றத் தீர்மானம் எண். 3045 அனுமதிக்கப்படுகிறது |
| 31.12.2018 | **<u>பொருள் எண்.3046</u>**<br>இந்நகராட்சியில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் வருகின்ற 12.12.2018 முதல் பல்வேறு கட்டங்களாக அரக்கோணம், வாலாஜாபேட்டை, இராணிப்பேட்டை , ஆற்காடு, மேல்விஷாரம் மற்றும் ஆரணி நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பணியினை சிறந்த முறையில் நடைமுறைகளை கையாளுதல் தனிநபர் உடல்நலம் பேணுதல் மற்றும் சமுதாய சுகாதாரம் பேணுதல் போன்ற பணிகளை செவ்வனே மேற்கொள்வது குறித்து முதல் இரண்டு கட்டமாக பயிற்சிகள் வழங்கவும் மேற்படி பயிற்சி நடைபெறும் காலத்தில் பயிற்சியில் பங்கேற்கும் பணியாளர்களுக்கு உரிய தங்கும் இடம் அல்லது பணியாளர்கள் வந்து செல்வதற்கான வாகன செலவு மற்றும் உணவு வசதிகள் செய்தல் போன்றவற்றிற்கான செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27547/2017/WB நாள் 07.12.2018–ன்படி இந்நகராட்சிக்கு மேற்படி (TNSUDP) திட்டத்தின் கீழ் ரூ.1,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** | நகரமன்றத் தீர்மானம் எண். 3046 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பயிற்சி வகுப்புகள் நடைபெற மற்றும் அதற்கான செலவினத்தை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2750/2018/எச்1)** | |
| 31.12.2018 | **பொருள் எண்.3047**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்கள், திருவிழா நடைபெறும் இடங்கள், பொங்கல் பண்டிகை நடைபெறும் இடங்கள் மற்றும் மயான கொள்ளை திருவிழா நடைபெறும் இடங்களில் கிருமிநாசினி தெளிக்க வேண்டியுள்ளதால் கிருமிநாசினி நீர்த்த சுண்ணாம்பு வாங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.60,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி நகர மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகராட்சி ஆணையாளர் (பொ) / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.0004/2019/எச்1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3047 அனுமதிக்கப்படுகிறது |
| 31.12.2018 | **பொருள் எண்.3048**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகள் மற்றும் வீடுகளில் நிகழும் பிறப்பு, இறப்புகளை இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பதிவு செய்து சான்றுகள் பொது மக்களுக்கு வழங்குவதற்கு ஏற்கனவே நகரமன்ற தீர்மானம் எண்.2917 நாள் 30.07.2018—ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின் பேரில் கீழ்கண்டவாறு படிவங்களை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் அச்சடிப்பதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,00,000/—இலட்சத்திற்கு மட்டும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. பிறப்பு அறிக்கை / பிறப்பு பதிவேடு சட்டம் — 5000 எண்ணிக்கை | நகரமன்றத் தீர்மானம் எண். 3048 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | சார்ந்த தகவல் படிவம் 1<br><br>2. இறப்பு அறிக்கை / இறப்பு பதிவேடு சட்டம் – 5000 எண்ணிக்கை<br><br>சார்ந்த தகவல் படிவம் 2<br><br>3. இறப்பு காரணத்திற்கான மருத்துவ சான்று – 2000 எண்ணிக்கை<br><br>படிவம் 4 (Sec Rule 7)<br><br>மருத்துவ சான்று படிவம் 4A (Sec Rule 7) – 5000 எண்ணிக்கை<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுதிக்கலாம்.<br>3) மேற்படி படிவங்களை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் அச்சடிப்பதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,00,000/–இலட்சத்திற்கு மட்டும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் . 2085 /2018/எச்1)** | |
| 31.12.2018 | **பொருள் எண்.3049**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 27 பிஞ்சி ஈஸ்வரன் கோயில் தெரு பகுதியில் பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு புதியதாக சிறுபாலம் அமைத்திடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,25,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண் .14 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3049 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 31.12.2018 | <u>**பொருள் எண்.3050**</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10 சீனிவாசன்பேட்டை டேங்க் தெரு பகுதியில் மிகவும் பழுதடைந்து தாழ்வான நிலையில் உள்ள சிறுபாலத்தை அகற்றிவிட்டு அவ்விடத்தில் புதியதாக சிறுபாலம் அமைத்திடவும், அதற்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,25,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>**அலுவலக குறிப்பு :-**</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண் .15 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3050 அனுமதிக்கப்படுகிறது |
| 31.12.2018 | <u>**பொருள் எண்.3051**</u><br>இந்நகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப்பணிகளுக்கான உரிய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்களுடன் கூடிய விரிவான திட்டப் பிரேரணைகள் ( Detailed Project Report) தயார் செய்து அதற்குரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறும் நடவடிக்கைகளுக்காக மேற்படி திட்டப் பணிகளுக்கான வரைபடங்கள், மதிப்பீடுகள் மற்றும் பிரிண்ட் எடுத்து Booklet வடிவில் தயார் செய்திடும் பணிகளுக்காகும் தோராய செலவினம் ரூ.50,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :-**</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண் .11 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3051 அனுமதிக்கப்படுகிறது |
| 31.12.2018 | <u>**பொருள் எண்.3052**</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10 சீனிவாசன்பேட்டை பகுதிக்கு செல்லும் குடிநீர் விநியோக பிரதான பைப்புகள் அனைத்தும் நெடுஞ்சாலை துறையின் மூலம் எம்.பி.டி. ரோட்டில் சாலை விரிவாக்கம் செய்திடும் பணியினை மேற்கொள்ளும்போது முழுவதுமாக சேதமடைந்து விட்டது. இதனால் மேற்படி பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் முழுவதுமாக தடைபட்டுவிட்டது. எனவே, மேற்படி பகுதிக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திடும் வகையில் புதியதாக குடிநீர் விநியோக பைப்புகள் அமைப்பதற்கும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.4,00,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :-**</u> | நகரமன்றத் தீர்மானம் எண். 3052 அனுமதிக்கப்படுகிறது |

<table>
<tr>
<td></td>
<td>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண் .12 /2018/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.12.2018</td>
<td><u>பொருள் எண்.3053</u><br>இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள பழைய நகரமன்ற கூடத்தில் பல்வேறு நகராட்சிகளிலிருந்து துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக கையாள்வது குறித்த பயிற்சி வகுப்புகள் வருகின்ற 12,13,14, மற்றும் 15.12.2018 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. மேற்படி பயிற்சி வகுப்புகள் நடைபெறும் பழைய நகரமன்ற கூடத்திற்கு Wall Mountain Fan – 8 எண்ணிக்கைகள் புதியதாக வாங்கி பொருத்துவதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது .<br><br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து உரிய விலைப்புள்ளிகள் பெற்று வாங்கி பொருத்திடவும் அதற்கான செலவினத்தை வழங்கிட மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண் .13 /2018/இ1)</td>
<td>நகரமன்றத் தீர்மானம் எண். 3053 அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>31.12.2018</td>
<td><u>பொருள் எண்.3054</u><br>இந்நகராட்சியில் பணிபுரியும் பொதுசுகாதாரப்பிரிவு பொறியியல் பிரிவு மற்றும் மகப்பேறு பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2018–19 ஆம் ஆண்டிற்கு பொது நிதியின் கீழ் ரூ. 4,00,000/ மதிப்பீட்டில் சீருடைகள் வழங்க நகரமன்ற தீர்மானம் எண். 2956 நாள் 28.09.2018 முன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின் பேரில் மேற்படி சீருடை சப்ளை செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து 11.10.2018–ல் விலைப்புள்ளி கோரியதில் அரசு அங்கீகாரம் பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருள்</th><th>அளவு</th><th>சிட்கோ (ரூபாய் )</th><th>அளவு</th><th>கோ–ஆப்ரேட்டிவ்</th></tr>
</table>
</td>
<td>நகரமன்றத் தீர்மானம் எண். 3054 அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | சொசைட்டி லிமிடெட் (ரூபாய்) |
| 1 | Khaki & Wite Polyester cloth (pant & Shirt) | Per Mtr | 165+5%GST | Per Mtr | 150+5%GST |
| 2 | Saree Green, Blue & White | 1 No | 455+5%GST | 1 No | 460+5%GST |
| 3 | Saree Greet & Blue & White with Border | 1 No | 510+5%GST | 1 No | 515+5%GST |
| 4 | Blouse Cloth | Per Mtr | 75+5%GST | Per Mtr | 77+5%GST |
| 5 | Head Cloth (Towel) | 1 No | 152+5%GST | 1 No | 155+5%GST |
| 6 | Turkey Towel | 1 No | 435+12%GST | 1 No | 440+12%GST |

| வ. எண். | பொருள் | அளவு | சிட்கோ (ரூபாய் ) | அளவு | ஜீ ஜே ஏஜென்சிஸ் |
|---|---|---|---|---|---|

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td>( ரூபாய் )</td></tr>
<tr><td>1</td><td>Gents Chappal & Ladies Chappal</td><td>1 Pair</td><td>246.00</td><td>1 Pair</td><td>194</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்<br>
2) மேற்கண்டவாறு சீருடைக்கு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் காலம் எண். 4–ல் கண்டுள்ள சிட்கோ நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) காலனிக்கு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் காலம் எண். 6–ல் கண்டுள்ள ஜீ ஜே ஏஜென்சிஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணிக்கு சப்ளை உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.2463/2018/எச்1)
</td><td></td></tr>
<tr><td>31.12.2018</td><td>
<u>பொருள் எண்.3055</u><br>
இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் இயங்கி வரும் மோட்டார்களை குடிநீர்நிதியின் கீழ் ரூ.3,20,000/– மதிப்பீட்டில் பராமரிப்பு செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2990 நாள் 31.10.2018–ல் அனுமதியளித்துள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.12.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மீதான ஒப்புதலுக்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு. கே. இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.டி.அருணகிரி, ஒப்பந்ததாரர்</td><td>1.50% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
</td><td>நகரமன்றத் தீர்மானம் எண். 3055 அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழஙகிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>(ந.க.எண். /2018/இ1)</u>

</td><td></td></tr>
<tr><td>31.12.2018</td><td>

<u>பொருள் எண்.3056</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள டர்பைன் மோட்டார்களை குடிநீர்நிதியின் கீழ் ரூ.5,00,000/– மதிப்பீட்டில் வருடாந்திர பராமரிப்பு செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2989 நாள் 31.10.2018–ல் அனுமதியளித்துள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.12.2018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மீதான ஒப்புதலுக்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு. கே. இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர் | 0.25% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.டி.அருணகிரி, ஒப்பந்ததாரர் | 1.25% மதிப்பீட்டை விட அதிகம். |

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழஙகிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3) மேற்கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டை விட 0.25%

</td><td>நகரமன்றத் தீர்மானம் எண். 3056 அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**(ந.க.எண். /2018/இ1)** | |
| 31.12.2018 | **பொருள் எண்.3057**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 2 காரை எல்.எப். ரோடு (பர்மா காலனி) பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்திடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,00,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**(ந.க.எண். 43 /2019/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3057 அனுமதிக்கப்படுகிறது |
| 31.12.2018 | **பொருள் எண்.3058**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN73D8573 எண்கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,60,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி வாகனத்தின் பழுதினை சரிசெய்ய வேண்டியதில் அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.2926/2018/எச்1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3058 அனுமதிக்கப்படுகிறது |

<table>
<tr><td>31.12.2018</td><td>

<u>**பொருள் எண்.3059**</u>

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணி 2018–2019–ன் கீழ் ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் Reclamation of Existing Dumpyard Located at Srinivasanpet M.B.T. Road by Removing Legacy waste of 20680 cum in Ranipet Municipality பணிக்கு மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 29.11.2018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதியை பெறுவதால் (Techinical Bid) மேற்படி 12.12.2018 அன்று திறக்கப்பட்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி (Price Bid) விவரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>SB & CO<br>No. 1, ESI Nagar, Agram Main Road,<br>Thiruvanchary , Chennai</td><td>4.94% Above Estimate</td></tr>
<tr><td>2</td><td>The Walajapet Agro Engineering & Service Co-operative centre Ltd., VV 2664</td><td>6.19 Above Estimate</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 4.94%(+) ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1059/2018/இ1)**

</td><td>நகரமன்றத் தீர்மானம்<br>எண். 3059<br>அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>31.12.2018</td><td>

<u>**பொருள் எண்.3060**</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் K.dis.No. 30813/J3/2018 நாள் 11.12.2018–ம் தேதிய உத்திரவில் இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு துப்புரவு பணி மேற்கொள்ள வெளிமுகவர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 96 பணியாளர்களை வேலூர் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்துக்கொள்ளுமாறு

</td><td>நகரமன்றத் தீர்மானம்<br>எண். 3060<br>அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுதிக்கலாம்.<br>**(ந.க.எண்.843/2018/எச்1)** | |
| 31.12.2018 | **பொருள் எண்.3061**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் K.dis.No. 30813/J3/2018 நாள் 11.12.2018–ம் தேதிய உத்திரவில் GO(ms) No. 101 Municipal Administration & Water Supply (ME3) Department Date : 30.04.1997–ன் அரசாணை அளவுகோளின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் பொதுசுகாதார பிரிவின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு மூன்று ஆண்டு காலத்திற்கு 96 பணியாளர்களை வெளிமுகவர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளவும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியம் ESI, EPF பாதுகாப்பு உபகரணங்கள் சீருடைகள் மற்றும் நிர்வாக செலவினம் தொகை ஆகியவற்றை வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவின்படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 96 நபர்கள் வெளி முகவர்கள் மூலம் நியமனம் செய்யவும் மாவட்ட ஆட்சியர் வேலூர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ESI, EPF பாதுகாப்பு உபகரணங்கள் சீருடைகள் மற்றும் நிர்வாக செலவினம் உட்பட ஓராண்டு காலத்திற்கு தோராய செலவினம் ரூ.147.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.147.00 இலட்சம் பொதுநிதி மற்றும் திடக்கழிவு உபயோகிப்பாளர் கட்டணம் ( SUC) **நிதி**யிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>4) மேற்படி பணி திருப்திகரமாக இருப்பின் மன்ற ஒப்புதல் பெற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு எதிர்வரும் ஓராண்டு காலத்திற்கு பணிக்கால நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கவும் அந்த வருடத்தில் மாவட்ட ஆட்சியர் வேலூர் அவர்களால் நிர்ணயிக்க கூடிய தினக்கூலி மற்றும் ESI, EPF பாதுகாப்பு உபகரணங்கள் சீருடைகள் மற்றும் நிர்வாக செலவினம் வழங்கவும் இடையில் ஏற்படும் துப்புரவு பணியாளர்களின் காலி பணியிடத்தில் தினக்கூலி பணியாளர்களை நியமனம் செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | நகரமன்றத் தீர்மானம் எண். 3061 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | **(ந.க.எண்.843/2018/எச்1)** | |
| 31.12.2018 | **<u>பொருள் எண்.3062</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 மற்றும் 20 சந்திப்பு பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி குடிநீர் தேவைக்கென ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்திடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,50,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிஅளிக்கலாம்.<br>**(ந.க.எண்.195/2019/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3062 அனுமதிக்கப்படுகிறது |
| 31.12.2018 | **<u>பொருள் எண்.3063</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகள் 8,9 மற்றும் 10 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்திட பயன்படும் வாரச்சந்தை பகுதியில் அமைந்துள்ள 14.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் உள்ள 40 (சப்மெர்சிபல்) மோட்டாரை 2019—2020 ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு செய்திடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.3,50,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மன்றம் அனுமதிஅளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 328/2019/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 3063 அனுமதிக்கப்படுகிறது |

xxxஒம்./ ஆர்.எஸ்.வெங்கடாசலம்
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.